Registered as a Newspaper in Ceylon. ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

ஏடு 7 EELA NADU இதழ் 70

National Tamil Daily தேசிய தினசரி

(22·4·65)

விசுவாவசு சித்திரை 10 துல்ஹஜ் பிறை 19 வியாழக்கிழமை

## இரத்தமில்லா இரத்த வங்கி!

"உரிமைக்காக இரத்தம் சிந்தவும் தயார்" என்று முழங்குவதற்கு யாழ்ப்பாணப் பகுதியில் பலர் இருப்பினும் ஆஸ்பத்திரியில் உயிருக்காக எமனுடன் போராடும் நோயாளிகளுக்கு இரத்தம் கொடுத்து உயிரைக் காப்பாற்றுவதற்கு இங்கு முன் வருவோர் குறைவு என்று பொதுவாகக் குறை கூறப் படுவதுண்டு. இதில் உண்மை இருக்கிறதென் பதை யாரும் மறுக்க முடியாது. சில மாதங்களுக்கு முன் ஒரு சிங்களத் தினசரிகூட "சிங்களம் வேண்டாம் என்று கூறும் தமிழர்களுக்கு சிங்களவர்களின் இரத்தம் மட்டும் தேவையா?" என்று கேட்டிருந்தது. எவர் என்னதான் சொன்னாலும் இரத்த தானம் செய்யும் மனப்பான்மை யாழ்ப்பாணப் பகுதியில் உள்ளவர்களுக்கு மிக மிகக் குறைவுதான்.



உயிருடன் போராடும நோயாளி

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலுள்ள இரத்த வங்கி அநேகமாக வரண்டு காணிருக்கும். உயிருடன் போராடும் நோயாளிகளுக்கு இரத்தம் செலுத்தினால் உயிர் பிழைக்கும் வாய்ப்பு இருந்தாலும் இரத்தம் கிடைப்பது மிக மிகக் கஷ்டம். உயிர் திரும்பக் கிடைத்தாலும் கிடைக்கும். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் இரத்தம் கிடைப்பது மிக மிகக் கஷ்டம்.

பொதுமக்கள் இரத்தம் கொடுக்க முன்வராததைக் கண்டு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலுள்ள டாக்டர்கள் தங்கள் தங்கள் இரத்தத்தைத் தானம் கொடுத்து மற்றவர்களுக்கு வழிகாட்டியுள்ளனர். யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி இரத்த வங்கிக்குப் பொறுப்பான டாக்டர் ஜோசப் இதற்கு வழி காட்டினார். இனியாவது யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி இரத்தவங்கியில் இரத்தம் நிரம்புமா?

# லஞ்சஊழல் புகார்

# தினசரி குவிகிறது

கொழும்பு, புதன்

தினசரி இருபக்கைந்து, முப்பது லஞ்ச ஊழல் குற்றச் சாட்டுக்கள் லஞ்சஊழல் குற்றச்சாட்டு விசாரணை கமிஷனர் காரியாலயத்துக்கு வந்து குவிவதாகவும் இதுபற்றி தீவிரமாகப் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும் ஒரு அதிகாரி தெரிவித்தார்.

இதைவிட லஞ்சஊழல் பற்றி சுமார் நூறு பேர் மீது குற்றச்சாட்டுக்கள் சமத்தப்பட்டுள்ளதாகவும் இதுபற்றி விசாரணை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினர்.

## பிரதமரின் நடவடிக்கை

பம்பலப்பிட்டி, புதன்

எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் பொலிஸ் அதிகாரிகளினால் துன்புறுத்தப்பட்டுள்ளார்கள் என்பதுபற்றி தமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட சில விஷயங்களைவிட்டு ஒரு விசாரணை நடத்துமாறும் அதற்காக ஒரு பொலிஸ் அதிகாரியைப் பொறுப்பித்துள்ளதாகவும் பிரதம மந்திரி டட்லி சேனநாயக்கா ஜனப்பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

## சீட்டிழுப்பு மூலம் பஸ் கண்டக்டர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், புதன்

பஸ் கண்டக்டர்கள் தெரிவு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் கச்சேரியில் சீட்டிழுப்பு மூலம் தெரிவுசெய்யப்பட்டது தொகுதிவாரியாக பல கண்டக்டர்களைத் தெரிவுசெய்வதற்காகவே இச்சீட்டிழுப்பு நடைபெற்றது.

வட்டுக்கோட்டை, உடுவில், உடுப்பிட்டி, நல்லூர் ஆகிய தொகுதிகளிலிருந்து சீட்டிழுப்பு மூலம் பல கண்டக்டர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இந்த வேலைக்குப் பெருமளவில் சிரேஷ்ட வகுப்பு சித்தியடைந்த வாலிபர்களே விண்ணப்பித்திருந்தனர்களென அறியப்படுகிறது.

தலைமைக்காரியாதிகாரி திரு. ரி. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இச்சீட்டிழுப்பில் இ. போ. ச. பிரதேச சபை மனேச்சரும் கலந்து கொண்டார்.

இச்சீட்டிழுப்பின் மூலம் பல கண்டக்டரை தெரிவுசெய்யும் முறையினால் சலுகைகாட்ட வாய்ப்பு இருக்காதென்றும் இதனால் விண்ணப்பித்தவர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படாதென்றும் இச்சீட்டிழுப்பில் கலந்துகொண்ட ஒருவர் தெரிவித்தார்.

வடபகுதி அசைஸ் விசாரணை

# சிகரட்டை வாங்கியதில் ஏற்பட்ட தகராறு

## சரசாலை கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியாழன்

"இறந்தவரை 2-ம் எதிரி உலக்கையால் மூன்று தடவை அடித்தபோது நான் குறுக்கிட்டு ஏன் அவரை அடிக்கிறதாகக் கேட்டேன். உடனே 2-ம் எதிரி எனக்கும் அடித்தார். நான் நிலத்தில் விழுந்துவிட்டேன். அதன்பின் 1-ம் எதிரியும் கொட்டனால் இறந்தவரை அடித்தார். 2-ம் எதிரி எனக்கு அடித்தபோது எனது நெஞ்சிலும், தோளிலும் கையிலும் காயம்ஏற்பட்டது."

சரசாலைக் கொலை வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ்நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது முருகன் கிருஷ்ணன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் 1964-ம் ஆண்டு மே மாதம் 19-ம் திகதி சரசாலையில் கணபதிராசன் என்பவரை, நடராசா, கணபதிப்பிள்ளை ஆகியோர் கொலைசெய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், திரு. ரி. தம்பிரத்தினம், திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் திரு. ரி. எஸ். ஆனந்தகுமாரசாமி நியமிக்கப்பட்டிருந்தார்.

கிருஷ்ணன் சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது:- காலஞ்சென்றவர் எனது கண்பன் 1-ம், 2-ம் எதிரிகளை எனக்குத் தெரியும், சம்பவம் நடந்ததினம் எனக்கு ஞாபகமிருக்கிறது. அன்று காலை 10 மணிக்கு இறந்தவரைச் சந்தித்தேன். சரசாலைக்கு அவரின் தகப்பனர் வீட்டுக்குச் சென்ளேம், அதன்பின் இறந்தவரின் சகோதரி வீட்டிற்குப்போனேம். சின்னத்தம்பி வீட்டுக்கிணற்றில் இறந்தவர் குளித்தார். இறந்தவர் சாவகச்சேரிக்குப் போகவிரும்பியதால் அவருடன் சென்றேன். வழியில் ஒரு கடைக்குச் சென்ளேம். அந்தக் கடை 1-ம் எதிரிக்குச் சொந்தமானது இறந்தவர் கடைக்குள் செல்ல நான் ரோட்டில் நின்றேன். இறந்தவர் கடையில் ஒரு பைக்கற் சிகரட் வாங்கினர் அதற்கு ஒரு ரூபாய் கொடுத்தார். நான் ஒரு சிகரட் கேட்டேன் அவர் சிகரட் பைக்கற்றை தவறவிட்டுவிட்டதாகக் கூறி மீண்டும் ஒரு பைக்கற் சிகரட் வாங்கிவந்தார். இரண்டாவது பைக்கற் சிகரட்டிற்கு இறந்தவர் காசு கொடுத்ததை நான் காணவில்லை. 1-ம் எதிரி இறந்தவரிடம் காசுதரும்படி கேட்டார். இறந்தவர் ஐந்து ரூபா கொடுத்ததாகவும் மீதிக்காசை தரும்படியும் முதல் எதிரியைக் கேட்டார். அதற்கு முதல் எதிரி சிகரட் பைக்கற்றுக்கு காசு தரவில்லை என்றும், பிறகு தரும்படியும் கூறினர். இறந்தவர் உடனே காசு தந்ததாகவும் மிச்சத்தைத் தரும்படியும் கூறி முதல் எதிரியைக் கையால் அடித்தார். அந்த அடி எங்கு விழுந்தது என்று எனக்குத் தெரியாது. அடி விழுந்ததும் முதலாம் எதிரி ஓடிவிட்டார். நான் இறந்தவரிடம் "வா போவோம்" என்று கேட்டேன். தான் மிச்சக் காசு வாங்கியபின்தான் வருவதாகக் கூறினர். இதன்பின் இரண்டாம் எதிரி வந்து என்னடா கடையில் வந்துசண்டை பிடிக்கிறாய் என்று இறந்தவரை உலக்கையால் அடித்தார். அடி விழுந்தபோது இறந்தவர் கடைவாசலில் இருந்தார், சம்பவம் நடந்த

(2-ம் பக்கம் பார்க்க)

# "வடவியட்னும்மீது தொடர்ந்து குண்டு வீசுவோம்

## சீன பயமுறுத்தலை நாங்கள் லட்சியம் செய்யவில்லை" —ரஸ்க்

வாஷிங்டன், ஏப்ரல் 21

வடவியட்னும் மீது தொடர்ந்து குண்டு வீச்சு நடத்தப்படும் என்றும், தென்வியட்னுமில் அமெரிக்கப் படைபலம் மேலும் மேலும் அதிகரிக்கப்படும் என்றும் அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. டீன்ரஸ்க் கூறினர்.

பாலங்களைத் தகர்த்தல், கடல்வழியாக வியட்காங் கொரில்லாக்கள் தென்வியட்னுமில் ஊடுருவுவதைத் தடுத்தல் ஆகிய நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ளும் என்றும் அவர் கூறினர்.

வியட்னுமில் நிபந்தனையற்ற முறையில் அமைதிப் பேச்சுக்கள் நடத்தவேண்டும் என்ற 17 மண்டல சார்பற்ற நாடுகளின் யோசனைக்கு தாம் இணங்குவதாக பிரெஞ்சு அதிபர் டிகால் அந்நாடுகளுக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்திருக்கிறார்.

சீனவின் பயமுறுத்தல் அமெரிக்காவின் வியட்னும் கொள்கையை எவ்விதத்திலும் மாற்ற முடியாது என அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு டீன்ரஸ்க் கூறினர்.

# ரயில் பெட்டிகளில் தார்பூச்சு இயக்கம்

## விஷமிகளின் புதிய செயல்

கொழும்பு, புதன்

சமீபத்தில் கொழும்பிலும் சுற்றுப்புறப் பகுதிகளிலும் 'தார்ப்பூச்சு' இயக்கம் ஆரம்பித்த சில விஷமிகள் இப்பொழுது ரயில்பெட்டிகளில் தங்கள் இயக்கத்தைத் தொடங்கியுள்ளனர்.

இந்த விஷமச் செயல்கள் பற்றி விசாரணை செய்யும்படி ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

ரயில்பெட்டிகளில் உள்ள ஆங்கில, தமிழ் எழுத்துக்கள் அழிக்கப்படவில்லையென்றும் சிங்கள எழுத்துக்களே தார் பூசி அழிக்கப்பட்டுள்ளதென்றும் இதன்மூலம் ஒருபகுதி சமூக மக்கள்மீது ரயில் பிரயாணிகளுக்கு ஆத்திரமூட்டலாமென விஷமிகள் கருதித் திட்டமிட்டு இச்செயலைப் புரிந்துள்ளதாகத் தோன்றுவதாக ஒரு அதிகாரி கூறினர்.

இதுபற்றி ரயில்வே தொழிலாளர் சிலர் விசாரணை செய்யப்பட்டதாகவும் தெரிகிறது.

## தேர்தலை ரத்துச் செய்க

நியூயோர்க், ஏப்ரல் 21

தென்ரொடீஷியாவில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை ரத்துச் செய்யும்படி ஐ. நா. காலனி ஒழிப்பு கமிட்டியைச்சேர்ந்த 24 நாடுகளில், 18 நாடுகள் பிரிட்டனைக்கேட்டுக்கொண்டிருக்கின்றன.

## வியட்னும் ஐக்கியதின கூட்டம்

பம்பலப்பிட்டி, வியாழன்

வியட்னும் ஐக்கிய தினக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சமசமாஜக்கட்சி (புரட்சிப்பிரிவு) டாக்டர் என். எம். பெரேரா தலைமையில் இயங்கும் சமசமாஜக்கட்சியையும் கம்யூனிஸ்ட்கட்சி (ரஷ்ய, சீன இரு பிரிவுகளும்)யையும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸையும் திரு. ஹெர்பேர்ட் குணவர்த்தனவின் இடதுசாரி ஐக்கிய முன்னணியையும் அழைத்துள்ளது. செஞ்சிலுவை சங்க மண்டபத்தில் இம்மாதம் 25-ந் திகதி நடைபெறவிருக்கும இக்கூட்டத்துக்கு திரு. எட்மண்ட் சமரக்கொடி தலைமை வகிப்பார்.

## பாணவிடை ஐயனர் உற்சவம்

வேலணை வற்றுறை, வியாழன்

பர்வதவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்கேஸ்வர சுவாமி என அழைக்கப்படும் பழமை வாய்ந்த புங்குடுதீவு பாணவிடை ஐயனர் ஆலய உற்சவம் சென்ற சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

# மலேஷியா பிரச்னைக்கு தீர்வு சாத்தியம்

## பிரதமர் துங்கு நம்பிக்கை

கோலாலம்பூர், ஏப்ரல் 21

மலேஷியா பிரச்னையில் ஒரு தீர்வு சாத்தியம் எனத்தாம் நம்புவதாக பிரதம மந்திரி திரு. துங்கு அப்துல் ரஹ்மான் கூறினர்.

நேற்று ஜப்பானியப் பிரதமர் திரு. ஸாட்டோவின் விசேஷத் தூதரை அவர் சந்தித்துப் பேசியபின் இத்தகவலை வெளியிட்டார்.

மலேஷிய பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் ஜப்பானிய அரசாங்கத்தின் விருந்தினராக டோக்கியோவுக்கு விஜயம் செய்யக்கூடும் என்றும் இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணேவும் அங்கு விஜயம் செய்வாரென்றும் அப்போது இருதலைவர்களும் சந்திக்கக்கூடும் என்றும் அறி

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பட்டினிகிடந்து சோம்பி இருக்கும் மக்கள் முன் வேலையாகவும் வேலை மூலம் உணவு அளிப்பதாக உறுதிகூறும் வகையிலேயும்தான் கடவுளும் தோன்றத் துணிவார்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு சித்திரை மீ 10 உ (22-4-65)

## விவசாய விருத்தி

உணவில் தன்னிறைவு காணும்பொருட்டு தீவிர விவசாய அபிவிருத்தி இயக்கம் தொடங்குவதற்கு உணவுவிவசாயமந்திரி திட்டமிட்டுள்ளார் பாராட்டுக்குரிய முயற்சி இது.

உணவுப் பொருள்களுக்காக இப்பொழுது பெருந்தொகையான பணம் வெளிநாடுகளுக்குச் செல்கிறது. உணவுப் பொருள் குறிப்பாக அரிசி வாங்குவதற்கு அரசாங்கம் பெருந்தொகையான பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது. வெளிநாடுகளில் அதிக விலைக்கு அரிசி வாங்கி மக்களுக்கு குறைந்த விலையில் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்குள்ளது. இதன்மூலம் ஏற்படும் நஷ்டத்தை சீனியின் விலையை அதிகரித்துடகூட ஈடுசெய்ய முடியாமலுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் உணவு மான்யத்துக்கான தொகை பெரும் பகுதியை விழுங்கிவிடுகிறது. விவசாயத்தை விருத்திசெய்து உணவில் தன்னிறைவு காண்பதன்மூலம் பொதுமக்களின் பணம் வெளிநாடு செல்வதைத் தடுக்க முடியும். நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டமும் நீங்கும். அரசாங்கத்தின் நிதிநிலையும் சீராகும். அந்நிய செலாவணியும் மிச்சமாகும்.

நெற்செய்கைக்கு ஊக்கமளிக்க உணவு விவசாய மந்திரி திட்டமிட்டுள்ளது வரவேற்கத்தக்கது. இலங்கையில் விவசாயத்துக்கான நீர்வளம் தாராளமாக இருக்கிறது. ஆள்பலமும் உழைப்புச் சக்தியும் இங்கு உண்டு. சரியான முறையில் திட்டமிட்டு உணவுஉற்பத்தியைப் பெருக்குவதற்கான உதவியும் உற்சாகமும் அளிக்கப்பட வேண்டியதுதான் அவசியம்.

காடுகள் எல்லாவற்றையும் அழித்துவிடுவதால் விவசாய விருத்தியோ உணவு உற்பத்தியோ எதிர்பார்ப்பதுபோல் ஏற்பட்டுவிடாது. ஏற்கனவே அழிக்கப்பட்ட காடுகளும் இனி அழிக்கும் காடுகளும் பயிர்ச்செய்கைக்கு முழுக்க முழுக்கப் பயன்படுத்தப்பட வேண்டியது முக்கியம். விவசாயத்துக்குரிய நிலங்களை எல்லாப் போகங்களுக்கும் உபயோகப்படுத்தப்பட வேண்டும்.

நிலத்தைப் பயன்படுத்தவும் சிறந்த உரம் கிடைக்கவும் அரசாங்கம் வசதி செய்வதுடன் நீர்ப்பாசன வசதிக்கு விரிவான முறையில் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும். விஞ்ஞானம் வளர்ச்சியடைந்துள்ள இன்றைய யுகத்தில் பலநாடுகள் புதியமுறைகளில் விவசாயத்தை விருத்திசெய்து உணவில் தன்னிறைவு பெற்றுள்ளதுடன் வெளிநாடுகளுக்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்து வருகின்றன. அந்த நாடுகளைப் பின்பற்றி இங்கும் விவசாயத்துறையில் நவீன முறைகளைக் கையாள்வது அதிக பயன் தரலாம், விளைச்சலைப் பெருக்குவதற்கு விவசாயிகளுக்குப் புதிய பயிர்ச்செய்கை முறையில் பயிற்சியளிப்பதும் விரும்பத்தக்கது.

விவசாயிகள் சுலபமான முறையில் கடன் பெறுவதற்கும் வசதி செய்யப்பட வேண்டும். மக்கள்வங்கி மூலமோ கூட்டுறவு வங்கிகள்மூலமோ இந்த வசதியைச் செய்வதுடன் அவற்றைத் திருப்பிப் பெறுவதற்கான வழிகளும் சுலபமாக இருக்க வேண்டும்.

நில, நீர்ப்பாசன அமைச்சும் உணவு விவசாய அமைச்சும் சேர்ந்து சரியான முறையில் திட்டமிட்டு அதன்படி செயலாற்றினால் உணவில் தன்னிறைவு காணும் நோக்கம் நிறைவேற முடியும்.

## முருகன் ஆலய திருக்கல்யாண உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

அராலி கிழக்கு ஆவரம்பிட்டி முத்துமாரியம்மன் கோவிலுக்கு அருகாமையிலிருக்கும் முருகன் கோவிலில் வருகிற ஞாயிற்றுக்கிழமை காலை விசேஷ அபிஷேகம் நடைபெறும். மாலை திருக்கல்யாணமும் பின்னர் முருகப்பெருமான். வள்ளியம்மை, தெய்வயானை அம்மன் சமேதராய் வீதிவலம் வருதலும் நடைபெறும்.

## எண்ணெய் கம்பனிகளுக்கு நஷ்டஈடு கிடைக்கும்

பம்பலப்பிட்டி, புதன்

1960-ம் ஆண்டு தேசிய மயமாக்கப்பட்ட எண்ணெய்க் கம்பனிகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான துரித நடவடிக்கைகளை அரசாங்கம் எடுப்பதற்கு தீர்மானித்துள்ளது. அமெரிக்காவிலிருந்தும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும் இருபிரதிநிதிகள் இதுபற்றி ஆராய்வதற்கு இலங்கைக்கு வருவார்கள் எனத்தெரியவருகிறது. இவர்கள் வந்ததும் இலங்கை அரசாங்க உத்தியோகஸ்தர்களுடனும் எண்ணெய்க் கம்பனியின் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தைகளை முதலில் நடத்துவார்கள்.

ஷெல் கம்பனி, கல்டெக்ஸ், எஸசோ, ஸ்டான்டேர்ட், ஈஸ்டேர்ன் முதலிய எண்ணெய்க்கம்பனிகள் எல்லாமாக ரூபா 10 கோடி நஷ்டஈடு அரசாங்கத்திடமிருந்து கோரியிருந்தனர். ஆனால் அரசாங்கம் ரூபா 8 கோடியே இருபது லட்சத்தைத்தான் கொடுக்கலாம் எனத் தெரிவித்திருந்தது. இலங்கை அரசாங்கம் எண்ணெய்க் கம்பனிகளை தேசிய மயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்கா இலங்கைக்கு கொடுத்துவந்த உதவியை நிறுத்தியிருந்தது. தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் தாம் மீண்டும் இலங்கைக்கு உதவி கொடுக்க உத்தேசித்துள்ளதாகவும் எண்ணெய்க் கம்பனிகளுக்கு நஷ்டஈடு கொடுக்கும் விஷயத்தை துரிதப்படுத்தும்படியும் அமெரிக்கா கேட்டிருந்தது

## தொழில் மந்திரி உறுதி

கண்டி, புதன்

'ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு உறுதிபூண்டுள்ள நாங்கள் முதலாளி—தொழிலாளி உறவை ஊக்குவிக்கவும் அரசாங்க-தனியார் துறையில் வேண்டிய பதவி உயர்வுகளை செய்யவும் எங்களால் இயன்றவரை முயற்சிகள் எடுப்போம்' என்று தொழில் மந்திரி ஜனாப் எம். எச். முகமது சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் ஆசிய மாவட்ட கருத்தரங்கில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

இலங்கை சர்வகலாசாலை ஒபயசேகரா மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் 45 நாடுகள் பங்குபற்றின, கருத்தரங்கிற்கு சர்வதேச ஆசிய நிர்வாக அதிகாரி திரு எஸ. கே. ஜெயின் தலைமை தாங்கினார்.

தொழில் மந்திரி தொடர்ந்து பேசியதாவது:-

தொழிலாளர்களின் உரிமைகளைத் தேசிய அரசாங்கம் பாதுகாக்கும், ஆனால் தொழிலாளர்களும் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்ய வேண்டும், சரிசமனாக இலாபத்தை முதலாளி—தொழிலாளிகளிடையே பகிர்வதால் சிறந்த முறையில் பொருள் உற்பத்தி பெருகுவதற்கு வழி வகுப்பதாக இருக்கும், தேசிய பொருளாதார உயர்ச்சிகுத் தொழில் உறவு முறைகள் அத்தியாவசியம்.

## மந்திரியின் உறுதி

உடுப்பிட்டி, வியாழன்

கரவெட்டி துன்னாலைப்பகுதிகளிலுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்கானநீர் விநியோகத் திட்டமொன்றை ஏற்படுத்தித் தருவதற்காக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் உடுப்பிட்டி மாவட்ட சபைத் தலைவர் திரு. க.ஜெயக்கொடியின் தலைமையில் ஒரு குழு ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்தைப் பேட்டி கண்டபோது அவர் அதற்கு ஆவன செய்வதாக உறுதியளித்தார். இத்திட்டத்தின்படி நெல்லியடி பட்டின சபைக்கும் கட்டைவேலி கிராம சபைக்கும் உட்பட்ட பகுதிகளுக்கும் குழாய் வழியாகக் குடிநீர் விநியோகிக்கப்படும். நெல்லியடி பட்டினசபைக்கு மின்சார விநியோகத்திட்டத்தையும் கூடிய விரைவில் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளிலும் ஈடுபடுவதாக அமைச்சர் வாக்களித்துள்ளார்.

## பட்டின சபை இடைத் தேர்தல்

உடுப்பிட்டி, வியாழன்

நெல்லியடி பட்டினசபையின் 7-வது வட்டார இடைத்தேர்தலுக்கான விண்ணப்பப்பத்திரங்கள் நெல்லியடி பட்டினசபைக் காரியாலயத்தில் தேர்தல் அதிகாரியின் முன்னர் வைத்துச் செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் தாக்கல் செய்யப்பட்டன திரு. பொ. செல்வராசா, திரு க. தவராசா ஆகிய இருவரே விண்ணப்பித்துள்ளனர். திரு. செல்வராசாவுக்குச் சைக்கிள், திரு. தவராசாவுக்குத் தராசு அடையாளமும் வழங்கப்பட்டுள்ளன,

இவ்வட்டாரத்திற்கு முன்பு திரு. எம். கதிர்காமர் அங்கத்வராகவிருந்தார்.

## இ. போ. ச. புதிய தலைவர்

கொள்ளுப்பிட்டி, புதன்

இலங்கை போக்கு வரத்து சபையின் புதிய தலைவராக திரு. ஆர். டி. டி. சில்வா நியமிக்கப்படவிருக்கிறார்.

இவர் முன்னரும் இப்பதவியை வகித்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

## சிகரட் வாங்கிய :

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது இருண்டுவிட்டது. அன்று நல்ல நிலா வெளிச்சம் இருந்தது. அத்துடன் கடையில் லாம்பு எரிந்துகொண்டிருந்தது. இதனால் எதிரிகளை அடையாளம் கண்டுகொண்டேன். பொலிஸாருக்கு நான் வாக்குமூலமளிக்கவில்லை. பயத்தினால் வீடுசென்றுவிட்டேன். மறுநாள் பொலிசார் என்னைத் தேடி வீட்டிற்கு வந்தார்கள். அப்பொழுது நான் வாக்குமூலமளித்தேன்.

எதிரிகளின் வழக்கறிஞர் திரு கே வி எஸ் சண்முகநாதன் குறுக்குவிசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:-

இறந்தவரை சாவகச்சேரியில் சந்தித்தேன் நான் அன்று சாவகச்சேரி சந்தைக்கு சாமான்கள் வாங்கச் சென்றேன். சாவகச்சேரியிலுள்ள வப்பன் ராசையாவை எனக்குத் தெரியும் அவரை சாவகச்சேரியில் காண்பது வழக்கம்

வழ: சாவகச்சேரிக் கோர்ட்டில் இராசையாவுக்கும் உமக்கும் எதிராக போடப்பட்ட வழக்கில் உமக்கு மூன்று மாதம் சிறைத்தண்டனை கிடைத்ததா?—இரண்டுமாதந்தான்,

வழ: வப்பன் இராசையாவிற்கு அந்த வழக்கில் ஆறு மாதம் தண்டனை கிடைத்தது?—ஆம்,

வழ: அவர் பல வழக்குகளில் ஈடுபட்டு பலதடவை மறியலுக்கும் போயிருக்கிறார்?—ஆம்

வழ: இறந்தவரும் பல வழக்குகளில் ஈடுபட்டுள்ளார்?—எனக்குத் தெரியாது.

நீதி: இறந்தவர் எந்த வழக்கிலாவது குற்றவாளியாகக் காணப்பட்டது தெரியுமா?—தெரியாது:

வழ: சம்பவம் நடந்த தினம் மதுபானம் அருந்தினீர்களா?—ஆம்.

நீதி: என்ன குடித்தீர்கள்?—பனங்கள்ளு.

வழ: அன்று இறந்தவரும் நீரும் நல்ல வெறியில் இருந்தீர்கள்? அவ்வளவுகல்லவெறியில்லை,

வழ சம்பவம் நடந்ததினம் இருவரும் நல்ல வெறியில் சென்று முதலாம் எதிரியை கப்பம் தரும்படி கேட்டீர்கள்?-மறுக்கிறேன்.

வழ சம்பவத்தின்பின் பொலிசாரிடம் போகவில்லை? இல்லை

வழ சொந்தக்காரருக்கும் சொல்லவில்லை? -இல்லை

வழ முதலாம் எதிரியுடன் வலியச்சண்டைக்குப் போனபடியால் தான் சம்பவம்பற்றி பொலிசாருக்கும் சொந்தக்காரருக்கும் நீர் கூறவில்லை?-இல்லை

விசாரணை இன்றுகாலை தொடர்ந்து நடைபெறும்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

ஜனங்கள் அந்த சம்பவத்தைப் பற்றி மறந்தேபோய்விடுவார்கள்!

இலங்கையில் கடந்த வருடங்களில் பொதுஜன ஆர்ப்பாட்டத்துக்கு அடிபணிந்து அரசாங்கம் எத்தனையோ கமிஷன்களை நியமித்திருக்கிறது. இவற்றால் ஏராளமான பணமும் நேரமும் செலவாகினது; கடைசியில் சில கமிஷன்களின் சிபார்சுகள் அமுலாகாமலே போய்விட்டன. தற்கொடபிட்டியாவின் லைலஞ்ச கமிஷன், இந்து ஆலய சொத்துக்கள் கமிஷன், வாளெளலி கமிஷன் ஆகியவற்றை இந்த வர்க்கத்தில் சேர்க்கலாம்.

புதிய அரசாங்கம் வந்ததும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் அலங்கோலங்களை ஆராயும்படி ஒரு கமிஷனை நியமிக்க உத்தேசித்திருக்கிறது. கல்விப் பகுதியில் ஆசிரிய நியமனம், இடமாற்றங்களைப்பற்றியும் ஒரு கமிஷனை நியமிக்க தாம் விரும்புவதாக கல்வி அமைச்சர் கூறுகிறார்.

இந்த விசாரணைகளை நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுகளில் நேர்மையும் திறமையுமுள்ள உத்தியோகஸ்தர்கள் இல்லையா? வீணாக ஏன் கமிஷனை நியமித்து பொதுக்காசைக் கரியாக்க வேண்டும்?

—"வழிப்போக்கன்"

## நாட்டிலும் நகரிலும்

வில்வத்தை ரயில் விபத்தைப்பற்றி விசாரணை நடத்திய கமிஷனின் சிபார்சுகளில் பெரும்பாலானவற்றை ஏற்கனவே தாம் எதிர்பார்த்து, அதன் அறிக்கை வெளியான அடுத்த நாளே அவை அமுல் நடத்தப்பட்டுவிட்டன என்றும் இம்மாதிரி விஷயங்களுக்கு ஒரு கமிஷனை நியமிப்பது அனாவசியமான காரியமென்றும் ரயில்வே அதிபர் திரு. ரம்பாலா கூறுகிறார். அரசாங்கம் மாறியபின் அவர் இப்படி தைரியமாகக் கூறுகிறார் என்று அவரை ஏளனம் செய்யாமல் அவர் கூறியுள்ள ஒரு பேருண்மையை நாமும் இடித்துக்கூற விரும்புகிறோம்,

சில காலத்துக்கு முன்பு, 'யுத்தம் செய்வதற்கு யுத்தம் ஒன்றும் வருகிறதில்லையே, எத்தனை நாட்களுக்கு நாங்கள் கைகால்களை ஆட்டி அசைக்காமல் இருக்க முடியும்' என்று நினைத்து, நமது கடற்படை வீரர்கள் ஒரு ரோந்து சுற்றக் கிளம்பினார்கள். சிங்கப்பூருக்கும் ஹொங்கொங்குக்கும் விரைந்தன. இலங்கையின் யுத்தக் கப்பல்களில் இரண்டு. அவ்விடங்களில் நமது தளபதிகள் இலங்கையின் கடற்படைபலத்தை காட்டியதோடு நின்றுவிடாமல் மிகவும் உல்லாசமாகப் தங்கள் காலத்தைக் கழித்தார்கள். திரும்பிவந்தபோது அவர்கள் ஒவ்வொருவரும் காமிராக்கள், ட்ரான்ஸிஸ்டர் ரேடியோக்கள், ஐஸ் பெட்டிகள், பெட்டி பெட்டியாக பிராண்டி, விஸ்கி முதலியவற்றையும் தங்கள் சொந்தப் பாவிப்புக்கென்று கொண்டு வந்தார்கள், ஆனால் கொண்டு வந்த இந்தப் பொருட்களை நேர்வழியாகக் கொண்டுவராமல் இரவு இரவாக கப்பிட்டியில் இறக்கி பின்பு வெற்றிலையில் தத்தம் இல்லங்களுக்கு சேர்ப்பித்தார்கள். இந்த உண்மைகள் யாவும் பின்னர் நடந்த ஒரு விசாரணைக் கமிஷன் மூலம் தெரியவந்தன.

இக்கமிஷனில் திரு. கே. எஸ. டி. சில்வா என்ற நியாயவதி ஒருவர்மட்டுமே அங்கத்தவராயிருந்தார். அவர் தீர விசாரித்தபின் சில உயர்ந்த தளபதிகளை குற்றவாளிகள் எனக்கண்டார், இத்தீர்ப்பை எதிர்த்து தளபதிகளில் ஒருவர் இலங்கையின் முறையான நீதிமன்றத்தில் வழக்கிட்டுத் தொடர்ந்தார் வழக்கில் தளபதிக்கு வெற்றி, இப்பொழுது நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து அரசாங்கத்தின் பிரதம வழக்காலோசகராகிய 'அட்டோர்னி ஜெனரல் அப்பீல் செய்துள்ளார்!

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு 'கமிஷன்' நியமிக்கவேண்டிய முகாந்திரம் யாது? இதனால் பொதுப்பணம் எவ்வளவு செலவு? சம்பந்தப்பட்ட தளபதிகளில் பிரதம கடற்படை தளபதியான ரொயின் டி. மெல் என்பவரும் ஒருவர். (இவர்தான் சதி வழக்கில் தண்டனை பெற்றவர்களிலும் ஒருவர்). அவர் இந்த விசாரணையை நடத்தியிருக்க முடியாது ஆனால் பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சு நடத்தியிருக்கலாமல்லவா? இதனால் பொருள் பணத்தை மிச்சம் பிடித்திருக்கலாமல்லவா!

சினிமா பார்க்கப்போன இடத்தில் குழந்தை அழத் தொடங்கிவிட்டால் தாய் 'சூப்பி'யால் அதன் வாயை அடைத்துப்போடுவாள்! அதுபோல்தான் இந்தக் கமிஷன்களும் ஏதாவதொரு சம்பவம் பற்றி ஜனங்களின் கூக்குரல் சற்றே அதிகமானவுடன் அரசாங்கம் ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்து ஜனங்களின் வாயை அடைத்துவிடும். கமிஷனின் விசாரணை முடிந்து அறிக்கை வெளியாவதற்குள்

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வியட்னமில் போரிட சீனமக்களுக்கு அழைப்பு

## அமெரிக்கரைவெளியேற்றமாபெரும் உலக இயக்கம் நடக்குமாம்

### "சீன மிரட்டல் அமெரிக்காவின் கொள்கையை இம்மியும் மாற்ருது" —ரஸ்க்

பீகிங், ஏப்ரல் 21

**அமெரிக்கா யுத்தத்தை விஸ்தரித்தால் வியட்னமில் சண்டையிடத் தயாராய் இருக்குமாறு சீன தனது மக்களை அழைத்திருக்கிறது. சீன மக்கள் காங்கிரஸின் நிரந்தரக் கமிட்டி, ஒரு தீர்மானம் மூலம் இந்த அழைப்பை விடுத்திருக்கிறது.**

"வியட்னும் மக்களுக்கு சாத்தியமான சகல உதவிகளையும் சீன செய்யும். அவசியமானல் சீனமக்கள் வியட்னும் சகோதரர்களுடன் தோளோடு தோள் சேர்ந்து அமெரிக்கரை எதிர்த்துப் போராடத் தயாராய இருக்க வேண்டும்" என அந்த வேண்டுகோளில் கூறப்பட்டிருக்கிறது,

வியட்னமிலிருந்தும் இந்தோசீனவிலிருந்தும் அமெரிக்கர்களை விரட்ட முழு ஆயுத்தம் செய்யுமாறு மக்களைக் கோரும் வேண்டுகோள் சீனவிலுள்ள பல ஸ்தாபனங்களுக்கும் விடுக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்கரை இப்பகுதியிலிருந்து துரத்த உலகம் முழுவதும் மாபெரும் இயக்கம் நடக்கும் என்றும் மேலும் கூறப்பட்டிருக்கிறது.

"வியட்னும் சம்பந்தமாகஜனதிபதி ஜோன்ஸனின் நிபந்தனையற்ற பேச்சுக்கான யோசனையை வடவியட்னமைப் போலவே சீனவும் நிராகரிக்கிறது, வடவியட்னமின் 4 அம்ச யோசனையை சீன ஆதரிக்கிறது என்றும் அது கூறியிருக்கிறது.

**அமெரிக்க எதிரொலி**

அதேசமயம் அமெரிக்கத் துருப்புகள் வெளியேற வேண்டும் என்பது உட்பட வடவியட்னமின் 4 அம்ச யோசனையை வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க் வாஷிங்டனிலநிராகரித்தார், "வியட்னமில் சீன தலையிடும் என்ற மிரட்டல்காரணமாக அமெரிக்காவின் போக்கு மாருது" என்றும் அவர் கூறினர்.

வியட்னும் சம்பந்தமாக 17 மண்டலசார்பற்ற நாடுகள் தெரிவித்திருக்கும் யோசனை பல ஆண்டுகளாக பிரான்ஸ் கூறிவரும் யோசனையைப் போன்றதே என பிரெஞ்சு அதிபர் டிகோல் அறிவித்திருக்கிருர்.

**நேற்றைய தாக்குதல்**

நேற்று வடக்கு வியட்னமில் அமெரிகக, தென்வியட்னும் விமானங்கள் மூன்று இலக்குகளைத் தாக்கின. டாங்ஹாய் நெடுஞ்சாலைப்பாலம் உட்பட பல கேந்திர இலக்குகள்மீது குண்டுகள் வீசப்பட்டன. பாலம் பலத்த சேதத்திற்குள்ளாயிற்று.

தென்வியட்னமில் முக்கிய கொரில்லா இலக்குகள்மீது 40 அமெரிக்க விமானங்கள் தாக்கியதில் ஏராளமான கொரில்லாக்கள் மாண்டதாக அறிவிக்கப்பட்டது, அமெரிக்க விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாய் ஹானேய்செய்தி ஒன்று கூறுகிறது.

## 3வது கிரிக்கெட் டெஸ்டில் மேற்கிந்தீஸ் வென்றது!

### உலக கிரிக்கெட் தலைமையை அடையும் கேந்திர வெற்றி

ஜார்ஜ்டவுன், ஏப், 21

ஆஸ்திரேலியாவுக்கும் மேற்கிந்தியக் கோஷ்டிக்குமிடையே இங்கு நடைபெற்ற 3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் 212 அதிகப்படியான ரன்களால் மேற்கிந்தியக் கோஷ்டி வெற்றிபெற்றது. இறுதி ஸ்கோர் விபரம் வருமாறு:

**மேற்கிந்தீஸ்**

முதல் இன்னிங்ஸ 355 ரன்கள். 2,ம் இன்னிங்ஸ 180 ரன்கள்.

**ஆஸ்திரேலியா**

முதல் இன்னிங்ஸ 179 ரன்கள், 2-ம் இன்னிங்ஸ 144 ரன்கள்.

கடைசி ஆஸ்திரேலிய விக்கெட் ரன் எதுவும் எடுக்காமலேயே வீழ்ந்தது.

இதுவரை இரு கோஷ்டிகளுக்குமிடையே மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. முதல் டெஸ்ட் மூன்றும் டெஸ்ட் ஆகிய இரண்டிலும் மேற்கிந்திய கோஷ்டி வெற்பெற்றது. இரண்டாம் டெஸ்ட் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

இரு நாடுகளுக்குமிடையே இன்னும் இரண்டு டெஸ்டுகள் நடைபெறவிருக்கின்றன,

மொத்தம் 5டெஸ்டுகளில் மூன்றுவது டெஸ்ட் தான் வெற்றிதோல்வியை நிர்ணயிக்கும் ஒரு திருப்பமாகக் கருதப்பட்டது, அநேகமாக சர்வதேச கிரிக்கட் சரித்திரத்தில் முதல்தடவையாக மேற்கிந்தீஸ வெற்றிவாகை சூடி ரப்பரைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கி. ஆ. பெ.க்கு 3 மாதச் சிறை

திருச்சி, ஏப்ரல் 21

கடந்த பெப்ரவரி 5-ம் திகதி ஆட்சேபகரமான ஒரு பிரசாரத்தை வெளியிட்டதற்காக திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதனுக்கு திருச்சி ஜில்லா மாஜிஸ்டிரேட் 3 மாத வெறுங்காவல் தண்டனை விதித்தார்,

இந்தப்பிரசாரம் அச்சடிக்கப்பட்ட அச்சகத்தின் கூட்டு உரிமையாளர் திரு. எம். சம்குணத்திற்கு ரூ 500 அபராதம் விதிக்கப்பட்டது. அச்சகத்தின் மனேஜருக்கு ரூ. 200 அபராதம்,

திரு. விஸவநாதனுக்கு வயது 67 ஆகிவிட்டது என்பதை முன்னிட்டு அவருக்கு 3 மாத வெறுங்காவல் தண்டனை விதிப்பதாக மாஜிஸ்டிரேட் கூறினர்.

## வடக்கே தமிழுக்கு மதிப்பு

சென்னை, ஏப்ரல் 21

வட இந்தியாவில் தமிழ் மொழியிடம் மதிப்பும் மரியாதையும் வைக்கப்பட்டிருப்பதாயும் அதனிடம் வேஷமெதுவும் இல்லையென்றும் காங்கிரஸ் அக்ராசனர் காமராஜர் கூறினர்,

சமீபத்தில் தமது வடஇந்திய சுற்றுப்பிரயாணத்தின் போது குமயமலை அடிவாரத்திலுள்ள ஒரு எல்லை ராஜ்ய மக்கள் தனக்குத் தமிழ்மொழியில் வரவேற்புரை ஒன்று வழங்கினர் என்றும் இதை அவர்கள் சிரமப்பட்டுத் தயாரித்தனர் என்றும் காமராஜ் கூறினர்.

"எனக்கு ஹிந்தியோ ஆங்கிலமோ தெரியாது என்பதை அறிந்து அந்த ராஜ்யத்தில் பணிபுரியும் தமிழருடன் தொடர்பு கொண்டு வரவேற்புரையைத் தமிழில் மொழி பெயர்க்கச் செய்து எனக்களித்தனர், இதுபோலவே போபாலிலும் மக்கள் தமிழில் வரவேற்புரை வழங்கினர்" என்றும் திரு. காமராஜ் கூறினர்.

## அண்டவெளியில் சர்க்கரை வள்ளி

கொலம்புஸ், ஏப். 21

அண்டவெளியில் சர்க்கரை வள்ளிக்கிழங்கை முதல் காய்கறியாகப் பயிரிட முடியுமென இங்குள்ள ஒரு தனியார் ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகள் கூறுகின்றனர்:

விண்வெளி நிலையத்தில் உணவுக்கு அவசியமான நூற்றுக்கு மேற்பட்ட தாவரங்களை மண் இன்றிப் பயிரிடமுடியும் என்றும், அவற்றில் முதலிடம் பெறுவதற்கான தகுதி சர்க்கரைவள்ளிக்கிழங்குக்கு இருப்பதாயும் அவர்கள் கூறுகின்றனர்.

## திருவானைக்காவல் திருப்பணி

திருச்சி, ஏப்ரல் 21

திருச்சி அருகேயுள்ள திருவானைக்காவலில் ஸ்ரீஜம்புகேஸ்வரர், அகிலாண்டேஸ்வரிகோயிலின் திருப்பணிவேலை மும்முரமாக நடந்து வருகிறது. இதற்கு ரூபா 12 லட்சம்செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பலேதிருடன் பொலிஸார் மகன்

எர்ணகுளம், ஏப்ரல் 21

தான் 26 திருட்டுக்களை நடத்தியிருப்பதாய் ஒரு பொலிஸ்காரரின் மகன் எர்ணகுளம் பொலிசாரிடம் ஒப்புக்கொண்டான். 25 வயதான அவனை குற்றப்பிரிவு பொலிசார் சனிக்கிழமையன்று ஒரு சினிமா தியேட்டர் அருகில் கைதுசெய்தார்கள். அவனது தந்தை குந்தார பொலிஸ் ஸ்டேஷனில் கான்ஸ்டபிளாக இருக்கிறார். எர்ணகுளம், கோட்டயம் ஆலப்புழை ஜில்லாக்களில் [illegible] திருடியிருப்பதாக இவன் ஒப் [illegible]

## அடுத்த மாதம் சாஸ்திரி ரஷ்யாவுக்கு விஜயம்

புதுடில்லி, ஏப்: 21

உலகசமாதானமும் படைக்குறைப்புமே இப்போது தேவை என இந்தியப் பிரமர் சாஸ்திரி இந்தோ-சோவியத் கலாச்சார சங்கத்தில் பேசியபோது குறிப்பிட்டார்,

அணுசோதனைத் தடை ஒப்பந்தத்தை ஏற்படுத்த ரஷ்யா செய்த பணியை அவர் பாராட்டி, நிலத்தடி அணுசோதனையைத் தடுக்கும்முறையில் ஒப்பந்தத்தை விரிவுபடுத்தவும் ரஷ்யா முயலும் என நம்புவதாகக் கூறினர். மண்டலசார்பற்ற கொள்கை சபலத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

"அமெரிக்கா வியட்னும்மீது தொடர்ந்து குண்டுமாரி பொழிந்துவந்தால், ஜனதிபதி ஜோன்ஸன் மண்டலசார்பற்ற நாடுகளின் வியட்னும் யோசனையை ஏற்றுக்கொண்டதாகக் கூறுவதற்கு அர்த்தம் இல்லை, வியட்னமில் போரை முடிவுக்குக் கொண்டுவருவதுதான் இந்தியாவின் கொள்கை" என்றும் திரு. சாஸ்திரி கூறினர்.

அடுத்தமாதம் திரு. சாஸ்திரி ரஷ்யாவுக்கு விஜயம்செய்கிறர், ரஷ்ய விஜயத்தைத் தாம் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக அவர் தெரிவித்தார்,

சாஸ்திரி தம்பதிகள் வருகிற வெள்ளிக்கிழமை நேபாளம் சென்று 3 நாள் மகேந்திர மன்னரின் விருந்தினராகத் தங்குவார்கள்.

## கட்ச் எல்லையில் பாகிஸ்தான் பீரங்கிப் பிரயோகம்

புதுடில்லி, ஏப். 21

கட்ச் சிந்து எல்லையின் புதிய பகுதி ஒன்றில் கஞ்சர் கோட்டிலிருந்து 50 மைல் தூரத்தில் பாகிஸ்தான் புதிய சம்பவம் ஒன்றை நேற்று உண்டாக்கியது, அங்குள்ள இந்திய பொலிஸ்படைமீதுபாகிஸ்தான் துருப்புக்கள் அரை மணி நேரம் பீரங்கிப் பிரயோகம் செய்தன,

கஞ்சர் கோட்டிலும் இருதரப்பாரும் பரஸ்பரம் சுட்டதாக அறிவிக்கப்பட்டது, இதற்கிடையில் சண்டை நிறுத்தத்திற்கும், முன் நிபந்தனையற்ற பேச்சுக்கும் இந்தியா தயாராய் இருப்பதாக பாகிஸ்தானிடம் அறிவிக்கப்பட்டிருக்கிறது,

சமீபத்தில் ஜம்மு எல்லையில் பஞ்சாப் முதன்மந்திரி மீது பாகிஸ்தான் துருப்புக்கள் சுட்டதுபற்றி ஒரு ஆட்சேபனையை பாக். உதவி ஹைகமிஷனரிடம் இந்தியா சமர்ப்பித்தது. ஆனல் ஒரு மணி நேரம் கழித்து அவர் இந்திய வெளிநாட்டு அமைச்சுக்குத் திரும்பிவந்து அக்குறிப்பை ஏற்கமுடியாது என திரும்ப ஒப்படைத்துவிட்டார்.

நேற்று பார்லிமெண்ட் காங்கிரஸ கட்சியின் நிர்வாக சபைக்கூட்டம் எல்லை நிலைமை பற்றி விவாதம் நடத்தியது. ராணுவ ஆயுதங்கள் பற்றி சபையில் திருப்தி தெரிவிக்கப்பட்டது,

## தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர் கைது

திருச்சி, ஏப்ரல் 21

"தஞ்சை மாலைமுரசு" பத்திரிகையின் திருச்சி பதிப்பின் ஆசிரியரும் பிரசுரகர்த்தாவுமான திரு. டி. பாலச்சந்திரன் இந்திய பாதுகாப்புவிதிகளின்கீழ் கைதுசெய்யப்பட்டார். ஹிந்தி எதிர்ப்புக்கிளர்ச்சியின்போது தூண்டிவிடும் ரீதியில் செய்திகளை அப்பத்திரிகை பிரசுரித்ததாம்.

## வியட்காங் ஆலோசனை தேவை

ஹானேய், ஏப் 21

வியட்காங் கொரில்லாக்களை ஆலோசனை கலக்காமல் வியட்னும் பிரச்னைக்குத் தீர்வுகாண முடியாது என்றும், தென் வியட்னமில் முக்கால் பகுதி அவர்கள் ஆதிக்கத்திலுள்ளது என்றும் ஹானேயிலிருந்து விடுக்கப்பட்ட அறிக்கை கூறுகிறது; மண்டலசார்பற்ற நாடுகளின் யோசனைக்கு இதுவே பதில் என்றும் அறிக்கை கூறுகிறது.

## சுப்ரமண்யம் திரும்பினர்

புதுடில்லி, ஏப். 21

பாண்டுங் மகாநாட்டின் 10-வது ஆண்டு விழாவில் கலந்துகொண்டுவிட்டு இந்திய உணவு மந்திரி திரு. சுப்ரமண்யம் நேற்றிரவு டில்லி திரும்பினர்;

பாண்டுங்கில் பாரதத்திற்கெதிரான உணர்ச்சி எதுவும் இருக்கவில்லையென்றும், இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோவுடன் தமது பேச்சுக்கள் நேசபாவமாக இருந்ததென்றும் திரு. சுப்ரமண்யம் நிருபர்களிடம் கூறினர்,

வழியில் சிங்கப்பூரில் நிருபர்களிடம் அவர் பேசிய போது மலேஷியா பற்றி சமரச உடன்பாட்டுக்குவர இந்தோனேஷியா ஆவல்கொண்டிருப்பதாய்க் கூறினர்,

## தமிழ் மொழியில் ஷேக்ஸ்பியர் நாடகம்

புதுவை, ஏப், 21

ஷேக்ஸ்பியர் நாடகமான "சிங்லீர்" தமிழ்மொழி பெயர்ப்பு நூலை முதல் மந்திரி திரு, பக்தவத்சலம் வெளியிட்டார், மொழி பெயர்ப்பது எளிதான வேலையல்ல என அவர் அப்போது கூறினர். புதுவை பிரதம நீதிபதி திரு. என், மகாராஜன் இந்த நூலை மொழிபெயர்த்திருக்கிருர்.

## கென்யா இந்தியர்

மொம்பாஸா, ஏப்ரல் 21

கென்யாவிலுள்ள இந்திய வம்சாவளியினர் அனைவரையும் கென்யா பிரஜைகள் ஆகும்படி இங்கு கூடிய கென்யா காங்கிரஸ் கேட்டுக் கொண்டது.

கென்யா அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கத்தின் ஆதரவையும் ஜனதிபதி கென்யாட்டாவிடம் நம்பிக்கையையும் கூட்டம் தெரிவித்துக் கொண்டது.

## 14 பேர் பலி: பஸ் தீவிபத்து

புதுடில்லி, ஏப், 21

தேசப்பூருக்கருகே ஒரு பஸ்ஸில் தீப்பிடித்தது காரணமாக 14 பேர் உயிருடன் வெந்து மாண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க நிருவகம்... நிதி

# அறிக்கை சமர்ப்பிக்குமாறு திறைசேரிக்கு மந்திரி உத்தரவு

கொழும்பு, புதன்

குழுவனிதிகளுக்கு முன்னுள் நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா விதித்திருந்த வரிகளை நீக்கிவிடும்படி நிதி மந்திரியை அரசாங்கக்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு. வேர்னன் ஜோன்கினைல கேட்டுக்கொண்டார்.

குழுவனிதிக்காகச் சேர்க்கப்பட்ட பணத்தின் முழுவிபரமடங்கிய ஓர் அறிக்கையை உடனடியாகச் சமர்ப்பிக்கும்படி திறைசேரியை நிதிமந்திரி யு. பி. வன்னிநாயக்கா கேட்டுள்ளார்.

குழுவனியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள ரோட்டுக்கள், குளங்கள் ஆகியவற்றைத் திருத்துவதற்காக இந்நிதியை உபயோகிப்பதற்கு மந்திரி திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. இதுகுறித்துப் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள எம். பி. க்களுடன் நிதிமந்திரி தொடர்பு கொண்டுள்ளார். அரசாங்க குழுவனிநிதியில் சேர்க்கப்பட்ட தொகை 60 லட்சம் என சமூகசேவைப் பகுதியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பொருளாதாரம் வளம்பெற குடிசைக்கைத்தொழில் அவசியம்

யாழ்ப்பாணம், வியா.

"எங்களூர் இளைஞர்களிடம் உள்ள கலைத்திறனைப் பிரதிபலிக்கும் இந்தப் பொம்மைகளை முதல்முதலில் வாங்கி விற்பனையை ஆரம்பித்துவைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இளைஞர்களிடம் இவ்வித கைத்தொழில் வன்மை இருக்கிறதென்பதை இக்கைத்தொழிலை ஆரம்பித்ததன் மூலமே காணக்கூடியதாயிருக்கிறது. இளைஞர்களின் மத்தியில் ஒளிந்திருக்கும் திறமைகளை இதுபோன்ற புதிய குடிசைக்கைத்தொழில்களை ஆரம்பிப்பதன் மூலம் வெளிப்படுத்திப் பொருளாதார வளத்துக்கு அத்திவாரமிடலாம்" என்று வட்டுக்கோட்டை இளைஞர் கழகத் தொழில்நிலையத்தில் உற்பத்திசெய்யப்பட்ட காகிதப் பொம்மைகளை வாங்கி விற்பனையை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் தலைமையாசிரியர் திரு. மா. தம்பிராசா குறிப்பிட்டார். முதன்முதலாக உற்பத்திசெய்யப்பட்ட பொம்மைகளை இவ்வளவு உயர்ந்த தரத்துடன் இருப்பதால் காகிதப்பொம்மை செய்யும் இக்கைத்தொழிலை விஸ்தரித்து நிலைபெறச் செய்யவேண்டியது அவசியமெனவும் அதனால் கிராமத்தின் பொருளாதாரம் வளம்பெறுவதோடு பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்குமெனவும் அவர் குறிப்பிட்டார். கழக இயக்குனர் திரு. கா. இராசரத்தினம், திருவாளர்கள் இ. கருணாநிதி, மு. வேதானந்தசிவம் ஆகியோரும் பேசினர்.

## உணவு மந்திரியின் அபிவிருத்தித்திட்டம்

பம்பலப்பிட்டி, புதன்

உணவு, கமத்தொழில் மந்திரி திரு. எம். டி. பண்டா உணவுப் பெருக்கத்தை நாட்டில் ஏற்படுத்துவதற்காக பல முறைகளைக் கமத்தொழில் அபிவிருத்தித்துறையில் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காகத் திட்டமிட்டுள்ளார். நாட்டில் அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் இன்னமும் இருக்கின்றதென்றும் அதனை நல்லமுறையில் சீர்திருத்தலாம் என்றும் மந்திரி அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

## 'இந்திய உதவிக்குழு' கூட்டம்

வாஷிங்டன், ஏப். 21

"இந்திய உதவிக்குழு"வின் கூட்டம் இன்று வாஷிங்டனில் ஆரம்பமாகியது. இந்தியாவின் 3-ம் ஐந்தாண்டுத்திட்டத்தின் கடைசி ஆண்டுக்கான உதவி பற்றி குழு ஆராயும். இந்தியா 126 கோடி டாலர் உதவி கேட்டிருக்கிறது. இதுவரை உதவிக்குழு 444 கோடியே 70 லட்சம் டாலர் இந்தியாவுக்கு வழங்கியிருக்கிறது.

## "திறமைக்கு எங்கும் மதிப்பு"

உடுப்பிட்டி, புதன்

"சமத்துவம், சமசந்தர்ப்பம், சமூக சீர்திருத்தம் முதலியன ஏற்படுவதற்கு விளையாட்டுப் போட்டிகளும் வழிவகுக்கின்றன. எந்த இனத்தவர் போட்டியிட்டாலும் திறமைக்குத்தான் பரிசளிக்கப்படுகிறது. அமெரிக்க நாட்டில் அங்குள்ள மக்கள் சிலரால் வெறுக்கப்படும் கறுத்த நீக்ரோக்கள்தான் இன்று உலகிலேயே சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்களாகவும் ஒலிம்பிக் சாம்பியன்களாகவும், நோபல் பரிசுகள் பெற்றவர்களாகவும் விளங்குகிறார்கள், நிறவெறி இவர்களது முன்னேற்றத்தைத் தடை செய்யவில்லை. எந்த விஷயத்திலும் திறமையுள்ளவர்களுக்கு எங்குமே மதிப்புண்டு."

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் கரணவாய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆண்டுவிழா நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசளிக்கும்போது பேசுகையில் கூறினார். இவ்வைபவத்தையொட்டி நடைபெற்ற 25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியில் புலோலியைச் சேர்ந்த கதிர்காமு என்பவர் முதலிடத்தைப் பெற்றார். இவருக்கு திரு. மு. சிவசிதம்பரம் பரிசில்களுடன் தன் சார்பில் பணமுடிச்சொன்றையும் வழங்கினார். சைக்கிளோட்டப் போட்டியை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. வி. கே. ஆறுமுகம் ஆரம்பித்துவைத்தார். பரிசளிப்பு வைபவத்தின்போது வரணி மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. வ. தங்கராஜாவும் பேசினார். இரவு வடகருணை வளர்மதி கழகத்தினரால் "இரத்தக் கண்ணீர்", "காதல் மாளிகை" என்னும் நாடகங்கள் நடிக்கப்பட்டன.

## 'சீட்டோ' பங்காளி பூட்டோ

பாண்டுங், ஏப். 21

இதர ஆசிய-ஆபிரிக்க நாடுகளுடன் சேர்ந்து இப்பகுதியில் ஏகாதிபத்தியத்தின் கடைசிச் சுவட்டையும் ஒழிக்க பாகிஸ்தான் போராடுமென அந்நாட்டின் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ இங்கு கூறினார். ஜனாதிபதி சுகர்ணோ திரு. பூட்டோவுக்கு "ஓட்டர் ஆப் இந்தோனேஷியன் ரிபப்ளிக்" என்ற விருதை வழங்கிக் கௌரவித்தார்.

## சைவப்புலவர் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

சென்னைச் சைவசித்தாந்த மகா சமாஜத்திய சைவப்புலவர் தேர்வுகள் அ. இ. சை. பு. ப. சங்கத்துக்கூடாக இலங்கையில் 1964-ம் ஆண்டு கார்த்திகையில் நடைபெற்றன. சைவப்புலவர் தேர்வுக்கு 7 மாணவர்களும் இளஞ் சைவப்புலவர் தேர்வுக்கு 7 மாணவர்களுமாக 14 பேர் தோற்றினர். சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:-

**சைவப்புலவர்கள்**

சதாசிவம் கனகசபாபதி, தம்பு சுவாமிநாதன், நாகமுத்தன் சிவலிங்கம், முத்துக்குமாரசாமி திருஞானசம்பந்தபிள்ளை, பஞ்சதேவரக்குருக்கள் விமலாதேவி.

செல்வன் மு. திருஞானசம்பந்தபிள்ளை முதல்வகுப்பில் சித்திபெற்றமையால் சமாஜத்தார் அளிக்கும் 50 ரூபா பெறுமதியான பரிசிலைப் பெறுகின்றார்.

**இளஞ் சைவப்புலவர்கள்**

சரவணமுத்து தியாகராசா, சுப்பிரமணியம் தம்பாபிள்ளை, கதிரவேலு சிற்றம்பலம், இரத்தினசபாபதி இராசேஸ்வரி.

**மகாநாடும் பட்டமளிப்பும்**

1963-64-ம் ஆண்டுகளில் சித்திபெற்ற சைவப்புலவர்களுக்கு அண்மையில் நடைபெறவிருக்கும் சைவப்புலவர் மகாநாட்டில் பட்டமளித்து, உரியவர்களுக்குப் பதக்கப்பரிசில்களும் புத்தகப்பரிசில்களும் வழங்கப்படும்.

## வெங்காயத் தடை நீக்கம் ஆராயப்படும்

பருத்தித்துறை, புதன்

வடபகுதி விவசாயிகட்கு பெரும் கஷ்டத்தை அளித்துவரும் வெங்காயத் தடையை நீக்குவதுபற்றி யாழ்மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் யாழ் மாவட்ட அதிபர் திரு. நெவில் ஜெயவீரா விடம் பிரஸ்தாபித்ததைத் தொடர்ந்து இதுவிஷயமாகப் பரிசீலனைசெய்ய அரசாங்க அதிபர் நகாநாயெட்ரொன்றை மே மாதம் 8-ம் திகதியன்று கூட்டவிருக்கின்றார் எனத்தெரியவருகிறது.

இம்மகாநாட்டில் விளைபொருட் சங்கங்களின் பிரதிநிதிகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள், வடபிரதேச உணவு உற்பத்திச் சமாஜப் பிரதிநிதிகள், கமத்தொழில் இலாகா உத்தியோகத்தர்கள் முதலான பலர் அழைக்கப்படவிருப்பதாக நம்பப்படுகிறது.

## கணவனுக்கு எச்சரிக்கை

மரணவிசாரணையில் சம்பவம்

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சி சிவபுரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவரின் மனைவி கனகம்மா (22) நச்சுத்திராவகம் அருந்தி மரணமானது குறித்து நடைபெற்ற மரணவிசாரணையின்போது இறந்தவரின் கணவர் ஆறுமுகம்சாட்சியமளிக்கையில் சிரித்தபடி பதிலளித்தபோது திடீர்மரண விசாரணை அதிகாரி அவரை அவ்வாறு சிரித்துக்கொண்டு பதிலளிக்கவேண்டாமென எச்சரிக்கை செய்தார், மேலும் சிரித்தால் கோர்ட்டை அவமதித்த குற்றத்துக்காக வழக்குத் தொடரவேண்டி நேரிடும் எனவும் அவர் எடுத்துக் கூறினார்.

திரு. ஆறுமுகம் தமது சாட்சியத்தின்போது காணம்சென்ற தமது மனைவி வீட்டுத் திறப்பைத் தொலைத்துவிட்டதால் தாம் அவரைக் கடிந்து பேசியதாகவும் இதன்பின்னர் தமது மனைவி நச்சுத்திராவகம் அருந்தியதாகக்கண்டு உருத்திரபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டபோது அவர் அங்கு மரணமானாரென்றும் தெரிவித்தார்.

மரண விசாரணை நடத்திய திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலைசெய்தார் எனத் தீர்ப்பளித்து பொலிசாரை மேலும் விசாரணைசெய்யுமாறு உத்தரவிட்டார்.

## வல்லை அம்மன் தீர்த்தோற்சவம்

வல்வெட்டித்துறை, வியாழன்

வல்லை அம்மன் தீர்த்தோற்சவ விழா இவ்வருடம் வெகு சிறப்பாக நடந்தேறியது. கைகூப்பி வழிபாடு செலுத்தும் பாவனையில் அமைக்கப்பட்ட ஐந்து அடி உயரப்பாவையும் குடத்திலிருந்து தண்ணீர் வார்க்கும் நிலையில் நிறுவப்பட்ட 40 அடி உயரப் பெண்ணின் தோற்றமும், சிங்கம், மீன்கள், பாம்பு இவற்றைத்தாங்கிய நுழைவாயில்களும் வீதியின் இருமருங்கிலும் காட்சியளித்துக்கொண்டிருந்தன. பல்லாயிரம் ரூபா செலவில் வாழைகளும், தோரணங்களும் கண்கொள்ளாக் காட்சியாகவிருந்தது. பலபகுதிகளிலிருந்தும் ஏராளமானோர் வந்து இக்காட்சிகளைக் கண்டுகளித்தனர்.


# ஹைவிட்டாமீல்

என்பதின் பொருள்

உங்கள் பண்ணை உயிரினங்களிலிருந்து ஆகக்கூடுதல் ஆதாயத்தை பெறுவீர்கள் என்பதே.

கால் நடைகளினதும், கோழி முதலிய பறவைகளினதும் எல்லா தீன்களும் ஒரே மாதிரிதான் என்பதாக அனேகர் கருதுகிறார்கள். அவை அப்படியல்ல. அவற்றில் அனேக வித்தியாசங்கள் இருக்கின்றன. வித்தியாசங்கள் என்பது நீங்கள் அடையும் கூடுதல் அல்லது குறைந்த ஆதாயத்தை கொடுப்பதுதான்.

ஏனெனில் ஹைவிட்டா

- கூடுதல் போஷாக்கையும் தாதுப் பொருட்களைக்கொண்ட கால்நடைத் தீனி.
- இலகுவாக கலந்து உடனடியாக சீரணமாகிறது.
- அதி நவீன பக்குவ முறைப்படி கட்டுப்பாடான நிலைமைகளில் ஆரோக்கியமான விதத்தில் நெடுங்காலம் கெட்டுப்போகாமல் இருக்கக் கூடியதாக தயாரிக்கப்படுகிறது.
- கோழிக்குஞ்சுகளுக்கும், நடுத்தரகோழிகளுக்கும் முட்டையிடும் கோழிகளுக்கும்இன்றியமையாத ஓர் கலவை தீன்.

உங்கள் பண்ணையில் உயிரினங்களுக்கான ஆதாயத்தை கொடுக்கும் தீனியை வாங்க திட்டமிடும்போது ஹைவிட்டா தீனியையே வாங்குவதென திட்டமிடுங்கள்.

HYVITA

ஹைவிட்டா உற்பத்திப் பொருட்கள் ...
டெலிபோன்: ஜா-எல-216, கொழும்பு-5767


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

மீசாலை, புதன்

சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழகத்தின் இரண்டாவது வருடாந்த யாழ்ப்பாணக் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி சாவகச்சேரியில் நடைபெற்று வருகிறது.

இப்போட்டியில் 'ஏ' பிரிவில் வெற்றி பெறும் கோஷ்டிக்கு திரு. வ. பொன்னுச்சாமி ஞாபகார்த்த கேடயம் வழங்கப்படும். 'பீ' பிரிவில் வெற்றி பெறும் கோஷ்டிக்கு சாவகச்சேரி நகராண்மை சபை அன்பளிப்பு கேடயம் வழங்கப்படும்.

இம்மாதம் 16-ந் திகதி ஆரம்பமான இக்கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வடமாகாணத்திலுள்ள திறமை வாய்ந்த கோஷ்டிகள் பங்கு பற்றியுள்ளன. இறுதிப் போட்டி மே மாதம் 1-ந் திகதி நடைபெறும்.

தையிட்டி ஸ்ரார்ஸிற்கும் ஒருக்கப் விளையாட்டுக்கழகத்திற்கும் நடைபெற்ற போட்டியில் தையிட்டி ஸ்ரார்ஸ் வெற்றி பெற்றது. சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழக 'பீ' பிரிவுக் கோஷ்டிக்கும் அபிவிருத்தி விளையாட்டுக் கழகத்திற்கும் நடைபெற்ற போட்டியில் சாவகச்சேரி மத்திய விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகத்திற்கும், அச்சுவேலி விளையாட்டுக் கழகத்திற்கும் நடைபெறவிருந்த போட்டியில் வல்வெட்டித்துறைக் கோஷ்டி வராததால், அச்சுவேலி கோஷ்டியினர் தெரிவு செய்யப்பட்டனர். கனோசா விளையாட்டுக்கழகத்திற்கும், கலைமணி 'பீ' பிரிவுக் கோஷ்டிக்கும் நடைபெற்ற போட்டியில் கலைமணி கோஷ்டி வெற்றி பெற்றது. கலைமணி விளையாட்டுக் கழகத்திற்கும், உடுவில் ஸ்ரார்ஸுக்கும் நடைபெற்றப் போட்டியில் கலைமணி விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது. அரியாலை விளையாட்டுக்கழகத்திற்கும் வல்வெட்டித்துறைக் கோஷ்டிக்கும் நடைபெறவிருந்த போட்டியில் வல்வெட்டிக் கோஷ்டி வராததால் அரியாலைக்கோஷ்டி வெற்றபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இன்று மாலை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக் கோஷ்டிக்கும், சாவகச்சேரி மத்திய விளையாட்டுக்கழக 'பீ' பிரிவுக் கோஷ்டிக்கும் போட்டி நடைபெறுகிறது. இன்னும் பதினொரு போட்டிகள் நடைபெறவிருக்கின்றன

—

## விளையாட்டுச்சங்க நிர்வாகிகள்

வல்வெட்டித்துறை வியாழன்

வல்வெட்டித்துறை விளையாட்டுச்சங்கத்தினரின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. வி. அமிர்தேஸ்வரராசா தலைமையில் நடைபெற்றது. பின் வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பெற்றனர்: தலைவர் வி. அமிர்தேஸ்வரராசா, உப தலைவர் க. நாராயணசாமி; போஷகர் க. சபாரத்தினம் (நக சபைத் தலைவர்), காரியதரிசி கு. அப்பாத்துரை; உப காரியதரிசி ஆ. அதிருபசிங்கம்; தனாதிகாரி வே. கார்த்திகேயன்.


REGAL — JAFFNA
NOW SHOWING
Kip Behar—Judy Miller
in
BEAUTY and the BODY
(Eastmancolor)

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (கொழும்பு)
நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு) மொடர்ன் (பண்டாரவளை)
விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரேலியா) ஜூப்பிட்டர் (குருநாகலை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்


## சமயப் பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

நாளை மாலை 6 மணி முதல் 8 மணி வரை இலங்கைப் பொதுஜன சேவைச்சங்க சமயப்பிரசார சபையினரால் பின்வரும் தேவஸ்தானங்களில் பிரசங்கங்கள் நடாத்தப்படவிருக்கிறது.

வண்ணை வைத்தீஸ்வர தேவஸ்தானத்தில் 'சமயக் குரவர்' எனும் பொருள் பற்றியும் நல்லூர் கிழக்கு மூத்த விநாயகர் ஆலயத்தில் 'இறை வழிபாடு' எனும் பொருள் பற்றியும் ஸ்ரீமத் வ. குகசர்மா கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள தேவஸ்தானத்தில் வித்துவான் வ. கந்தையா 'சக்தி வழிபாடு' எனும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

—

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

பருத்தித்துறை, புதன்

புலோலி மெதடிஸ்த பாடசாலை உதவி ஆசிரியர்கள் திரு. வி வைரமுத்து, திரு. ப. இராமலிங்கம் ஆகியோர் தலைமை ஆசிரியராயும், சிரேஷ்ட உதவி ஆசிரியர் ஆகவும் பதவி உயர்வு பெற்று முறையே கொக்கட்டிச்சோலை இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைக்கும், களுதாவளை இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

துன்னாலை சிவப்பிரகாசவித்தியாசாலை உதவி ஆசிரியர் திரு. எஸ். அம்பலம் நாகர் கோவில் நாகேஸ்வரவித்தியாசாலைக்குத் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வுபெற்றுச் செல்கின்றார்.

ஞானசாரியர் கல்லூரி ஆசிரியர் திரு. ஏ. கதிர்காமத்தம்பி தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வுபெற்று வவனியாவிற்கு இடமாற்றம்செய்யப் பட்டுள்ளார். ——

## ராக்ஷச கடற்பிராணி

வவனியா, வியாழன்

முல்லைத்தீவுக்கருகாமையிலுள்ள குமுளமுனைக் கடற்கரையில் சுமார் 60 அடி நீளமுள்ள ராக்ஷச கடல் பிராணி ஒன்று இறந்தநிலையில் கரை வந்தடைந்திருக்கிறது. இதனைப் பலர் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

சுமார் 500 அந்தர் நிறையிருக்குமெனக் கருதப்படும் இந்த விசித்திரப் பிராணியின் மூக அமைப்பு யானையின் முகத்தை ஒத்திருக்கிறது. இந்தபிராணி அழுகியநிலையில் காணப்படுகிறது.

—

## சமஸ்கிருத வகுப்பு

யாழ்ப்பாணம், புதன்

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் தேவஸ்தானம் சமஸ்கிருத வகுப்பு ஒன்றினை ஆரம்பித்துள்ளது. தினசரி மாலை வேளைகளில் நடைபெறும் இவ் வகுப்பில் பல மாணவர்கள் கல்விபயில்கின்றார்கள்.

—

## வானொலி நிகழ்ச்சிகள்

**வியாழன் 22-4-65**

**கொழும்பு**

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவசுற்சிந்தனை, 6-55 இஸ்லாமியசுற்சிந்தனை, 7-00 துதிப் பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 திரைகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மன்றம், 5-45 திரைப்பட இசை.

இரவு 6-15 கிராமநிகழ்ச்சிகள், 6-45 இசைவகுப்பு, 7-00 மதிப்புரை, 7-15 வயலின் — எஸ சர்வேஸ்வரசர்மா, 7-45 லண்டன் கந்தையா, 8-00 [illegible] 9-15 [illegible] நிலைய ஒலிப்பதிவுகள்.

## திருக்குறள் மகாநாடு ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம் வியாழன்

தமிழ்மறைக் கழகத்தின் 13-வது திருக்குறள் மகாநாடு கிளிநொச்சி தொகுதியில் ஜூன் 11-ம் திகதி தொடக்கம் ஆறு நாட்கள் நடைபெறும். முதல் மூன்று நாட்கள் கிளிநொச்சியிலும், நாலாம்நாள் மல்லாவியிலும் 5-ம் நாள் பூநகரியிலும், 6-ம் நாள் பளையிலும் வெகு சிறப்பாக மகாநாட்டை நடத்துவதற்கு அவ்வப்பகுதி மக்கள் முன்வந்துள்ளனர். மகாநாட்டு செயற்குழு ஒன்றை நியமிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகள் தமிழ்மறைக்கழகத் தலைவரும் கிளிநொச்சித்தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு கிளிநொச்சி தொகுதியிலுள்ள பல பொதுநிலையங்களின் பிரதிநிதிகளும்—பிரமுகர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். இலங்கையிலுள்ள தமிழ்ப்பேரறிஞர்களும் தமிழகத்து பேரறிஞர்களும் மகாநாட்டுக்கு அழைக்கப்படுவார்கள். ——

## புகார் பற்றி விசாரணை

கொள்ளுப்பிட்டி, வியா.

முந்திய அரசாங்கத்தில் முக்கிய பதவிகள் வகித்த அரசியல் வாதிகள் சிலரின் தீய நடத்தைக்கு கல்வி இலாகாவைச் சேர்ந்த சில உத்தியோகத்தர்கள் உதவிவந்தார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள புகார்கள் குறித்து விசாரணை நடத்த கல்வி அமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இந்த அதிகாரிகள் சிலருக்கு நியமனங்கள் பெற்றுத்தருவதாக உறுதியளித்து குறிப்பிட்ட அரசியல்வாதிகளின் தீய நடத்தைக்கு இவர்களை உடன்படச்செய்தார்கள் என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது

—

## பொலிஸ்நிலையம் விஸ்தரிக்கப்படும்

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறைப் பொலிஸ நிலையம் விரைவில் விஸ்தரிக்கப்படலாமெனத் தெரியவருகிறது.

இந்த நிலையத்தில் பொலிசாரின் தொகையை அதிகரித்து அவர்களில் ஒரு பகுதியினர் மூலம் நெல்லியடியில் ஒரு உப பொலிஸ்நிலையத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது

பொலிஸ்நிலைய விஸ்தரிப்பை முன்னிட்டு விரைவில் பொலிஸாருக்கு விடுதிவசதி ஏற்படுத்த வசதியான வீடுகள் வாடகைக்கு அமர்த்தப்படலாம் எனவும் நம்பப்படுகிறது. ——

## வினோபாவுக்கு ஏமாற்றம்

சென்னை, ஏப். 21

வினோபாஜீயின் பூதான இயக்கத்தின் கீழ் நாடு பூராவிலும் பூதானமாக அளிக்கப்பட்ட 42,27,476 ஏக்கர் நிலத்தில் (சுமார் 40 சதவிகிதம்) 14,84,830 ஏக்கர் நிலம் சாகுபடிக்கு லாயக்கற்றது எனத் தெரியவந்துள்ளதாய் தமிழ்நாடு பூதானக் கமிட்டிப்பிரமுகர் ஒருவர் கூறினார்.

தமிழ்நாட்டில் பூதானமாகப் பெற்ற 80,433 ஏக்கர் நிலமும் எதுவுமே சாகுபடிக்கு லாயக்கற்றது என்றும் அவர் கூறினார்.

வியாபாரம் பெருகி விளம்பரம் செய்


## கேள்வி விளம்பரம்

யாழ்ப்பாணம் மாநகரசபை ஊழியர் நல உரிமைச் சங்கத்தின தேநீர்ச்சாலையை (Canteen) நடாத்துவதற்கு தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து 30-4-65-ந் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்களும் இதர விபரங்களும் அலுவலகத்தில் நேரில் அல்லது தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

நா. சண்முகநாதன்,
செயலாளர்
யாழ். மாநகரசபை ஊழியர் நல உரிமைச் சங்கம்
மாநகரசபை,
141 யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

சொந்தப் பாவிப்பிலுள்ள E N 8000 தொடர்இலக்கமுள்ள மொறிஸ்மைனர் 5 டயர் பற்றறி, எஞ்சின், அப்போல்ஸ்றி, பெயின்ற் எல்லாம் நல்லவை. டிறேட் அண்ட் டிரான்ஸ்போட் ஷோரூமில் பார்வையிடலாம். மறுவிபரங்களுக்கு: 91, பெரியதெரு, யாழ்ப்பாணம். 76

தொய்வு, கசம், நீரிழிவு, வெண்ணை முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கை இலவசம், மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சைபெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.


## நிவாரண உதவி பெற்றனர்

கிளிநொச்சி, வியாழன்

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென "ஈழநாடு புயல்நிவாரண சபை" யால் சேர்த்து அனுப்பப்பட்ட உடைகளும் அரசாங்கத்தினால் சேர்த்து அனுப்பப்பட்ட உடைகளும் சென்ற ஞாயிற்றுக்கிழமை தர்மபுரமக்களுக்கு வழங்கப்பட்டது. இப் புடைவைவிநியோகத்தின்போது கிராமசேவையாளருக்கு உதவியாக கிராம முன்னேற்றச்சங்க சமாஜத் தலைவரும் தர்மபுரம் மாதர்சங்கத்தினரும் கிராம சபை அங்கத்தவரும் சமூகமாயிருந்து இப்பங்கீட்டை நடாத்தினார்கள்.

—

## ரஸிக ரஞ்சன சபா இசைவிழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் ரஸிகரஞ்சன சபாவின் ஆதரவில் யாழ்ப்பாணம் சன்மார்க்க போதனா ஆங்கில வித்தியாசாலையில் நடைபெறும் நான்காம்நாள இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்.

மாலை 5-30—5-45 யாழ்ப்பாண ரஸிகரஞ்சனசபா சங்கீதக்கலாசாலை கீழ்ப்பிரிவு மாணவர்கள்-பாட்டு, 5-45—6-00 யாழ் ரஸிகரஞ்சனசபா சங்கீதக்கலாசாலை 2-ம் பகுதி மாணவர்கள்-பாட்டு, 6-00—7-00 செல்வி லீலாவதி இரத்தினசிங்கம் பாட்டு, 7-00—8-15 திரு வி. ஜெயவீரசிங்கம்-பாட்டு 8-15—8-30 யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் திரு எஸ். சி. மகாதேவா-தலைமையுரை, 8-30—9-45 சிங்கப்பூர் சகோதரர்கள்-பாட்டு, 9-15—11-00 பிரம்மஸ்ரீ ஆர். மூர்த்தி ஐயர்-வேணுகானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்லிமெண்டில்

# தமிழர் மீது ஆர். ஜி. பாய்ச்சல்

## "புரியக்கூடிய மொழியில் பேசினால் சரியான பதில் கொடுப்பேன்"

— அமிர்தலிங்கம்

கொழும்பு, செவ்வாய்

'தேசிய அரசாங்கம் தொடர்ந்து பதவி வகித்து வருமா என்பதுபற்றி எனக்கு சந்தேகமே, ஏழு கட்சிகளின் உதவியைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதாலேயே இவ்வித சந்தேகம் எனக்கெழுந்துள்ளது.

இவ்வாறு எதிர்க்கட்சி அங்கத்தவர் திரு. ஆர். ஜி. சேனநாயகா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் சிம்மாசனப் பிரசங்கத்தின் மீதான விவாதத்தின் பேசகையில் குறிப்பிட்டார் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

இந்த தேசிய அரசாங்கம் ஒரு கொள்கை அடிப்படையில் இயங்குமா என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். முன்னர் ஐக்கிய தேசியக்கட்சி பார்லிமெண்டில் 50 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தபோது அக்கட்சியின் தலைவர் திரு. டட்லி சேனநாயகா கூட்டரசாங்கம் ஒன்றை உருவாக்க மறுத்துவிட்டார். ஆனால் தமது கட்சியுடன் சேருமாறு மற்றக் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார், இப்பொழுது ஏதோ சில காரணங்களுக்காக தேசிய அரசாங்கத்தை உருவாக்கியுள்ளார்.

தேர்தல் காலத்தின் போது தாம் பௌத்த மதத்தைப் பாதுகாக்கப் போவதாக யு. என். பி. யினர் கூறிவந்தனர். சுமார் 60 சதவிகிதம் பௌத்த மதத்தவர்களைக் கொண்ட பகுதிகள் சுதந்திரக்கட்சி அங்கத்தவர்களையே தெரிவு செய்து அனுப்பியுள்ளன. கத்தோலிக்கர்கள், இந்தியர்கள் மற்றும் சிறுபான்மை இனத்தவர்கள் வாழும் பகுதிகளில் யு என் பி அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள், வத்தளை, நீர்கொழும்பு, சிலாபம், நாத்தாண்டியா, வென்னப்புவா, மொறட்டுவை போன்ற கத்தோலிக்கத் தொகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்.

மலைநாட்டுத் தொகுதிகளில் யு என் பி வெற்றிபெற திரு. தொண்டமான் பெரிதும் உதவி செய்துள்ளார், மற்றும் பல தொகுதிகளில் மூஸ்லிம் அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள், இவ்விதம் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள் பௌத்த மதத்தை காப்பாற்றுவார்களென நாம் எவ்விதம் நம்பலாம், இவர்களுக்கெல்லாம்? பௌத்தமத மக்களில் என்ன அக்கறையிருக்கும்?"

### 'பாடசாலைகள் திருப்பி ஒப்படைக்கப்பட மாட்டாது'

திரு ஆர் ஜி; பொறுப்பேற்கப்பட்ட கத்தோலிக்க பாடசாலைகளை கத்தோலிக்கர்களுக்கு மீண்டும் திருப்பி ஒப்படைக்க கல்வி மந்திரி திட்டமிட்டுள்ளாரா? எனக் கேட்டபோது கல்வி மந்திரி திரு இரியகொல குறுக்கிட்டு பாடசாலைகளைத் தாம் திருப்பிக் கொடுக்கப் போவதில்லையென பதிலளித்தார்,

திரு ஆர் ஜி சேனநாயகா யு என் பி க்கும் கத்தோலிக்கர்களுக்குமிடையே ஏதோ ஒரு உடன்பாடு இருப்பதாக தெரிவித்த சமயத்தில் கல்வி மந்திரி திரு இரியகொலக்கும் டாக்டர் என் எம் பெரேராவுக்குமிடையே சொற்போர் மூண்டது, இக்கட்டத்தில் சபாநாயகர் குறுக்கிட்டு அமைதியை நிலைநாட்டும்படி உத்தரவிட்டார்.

திரு ஆர். ஜி மேலும் கூறியதாவது:

கண்டிய ரெவரும் மந்திரியாக நியமிக்கப்படவில்லை, ஆனால் இரு இந்தியர்கள் (திரு. தொண்டமான், திரு. அண்ணாமலை) நியமன அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்,

காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா, பண்டா-செல்வா ஒப்பந்தத்தை யு. என். பி.யினரால் தான் கைவிட்டார், அந்த ஒப்பந்தத்தின் கெடுதிகளைப் பற்றி யு என். பி. தான் அதிகமாகக் கூறியிருந்தது. இப்படிப்பட்ட யு என் பி தமிழரசுக்கட்சியுடன் எவ்விதம் சேரமுடியும்?

இப்போது யு என் பி தமிழரசுக்கட்சியின் காரியதரிசி திரு. திருச்செல்வத்துக்கு முக்கிய பதவி வழங்கியுள்ளது. அரசாங்கம் அவருக்கு மிக முக்கிய மந்திரிப் பதவியை வழங்கியுள்ளது. இந்த நாட்டைப் பிரிக்கக்கூடிய அதிகாரமுள்ளது இந்த அமைச்சு. வடக்கு கிழக்கு மாகாணங்களை எடுத்துப்பார்ப்போம், இந்த மாகாணங்கள் எந்த மொழியில் தொடர்புகொள்ளப்போகின்றன?

தனிச் சிங்களச் சட்டத்தை முழுக்க முழுக்க ஆதரித்த கனவான் இப்போது மந்திரி திருச்செல்வத்துக்கு உதவி மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யு என் பியுடன் எந்தச் சூழ்நிலையில் தமிழரசுக்கட்சி சேர்ந்துள்ளதென்பதைப் பற்றி நாம் ஆராய்ந்துபார்க்கவேண்டும்.

மலாயா, இந்தியா ஆகிய நாடுகளிலும் இலங்கையிலும் தமிழரின் தொடர்பு அதிகரித்துக்கொண்டுவருகிறது. தனிப்பட்ட ராஜ்யங்களை அமைத்துக்கொள்ள அவர்கள் விரும்புகிறார்கள். இதில் தி மு கவும் பங்குகொண்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் குறுக்கிட்டுப் பேசியபோது திரு பொன்னம்பலமும் சண்டியை எதிர்ப்பவரென திரு. ஆர். ஜி. கூறினார்.

திரு ஆர். ஜி. பின்னர் பேசுகையில் தமிழரசுக்கட்சி நாட்டைப் பிரிக்க முயற்சிக்கிறது. அதனால் அது இந்தியாவுக்கு உதவ எண்ணுகிறது. அவர்களது முக்கிய நோக்கம் தனி ராஜ்யத்தை உருவாக்குவது தான் என்றார், இந்தச் சந்தர்ப்பத்தில் திரு. அமிர்தலிங்கம் குறுக்கிட்டுத் தாம் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் பேசுமாறும் அவ்வாறு பேசினால் தாம் உரிய பதில் அளிக்கமுடியுமென்றும் தெரிவித்தார்.

திரு. அமிர்தலிங்கம்: நீர் ஒரு கோழையாக இருக்க வேண்டாம், எந்தக் கேள்விக்கும் பதிலளிக்க நாம் எப்போதும் தயாராகவிருக்கின்றோம்.

திரு. ஆர். ஜி. தொடர்ந்து பேசியதாவது: கொரியாவில் நடந்ததுபோல் எல்லைகளை வரைவதற்குத் தமிழரசுக்கட்சியினர் விரும்புகின்றனர். இந்திய இராணுவத்தினருக்கு உதவ அவர்கள் உத்தேசித்துள்ளனர். கிராமசபைகள் இருக்கும்போது பிரதேசசபைகள் அமைப்பதற்கு அரசாங்கம் ஏன் முன்னிற்கிறதென நான் கேட்கவிரும்புகிறேன்?

# "ஆத்மிக வளர்ச்சியில்லாவிடில் வாழ்க்கையில் பயனில்லை"

பருத்தித்துறை, செவ்.

விஞ்ஞான உலகம் எவ்வளவு தூரத்துக்கு நம்மைக் கவர்ந்தாலும் ஆத்மீகத் துறையில் நாம் வளர்ச்சியடைந்துவிட்டால் எந்த விதமான பலனும் ஏற்படப் போவதில்லை. கீழைத்தேசம் ஆத்மீகத்துறையில் மேலான இடத்தை வகித்து வந்தது. அதனால் தான் கடவுள் பக்தியும் தர்மசிந்தனையும் நம்மிடையே நிலையான இடத்தைப் பெற்றது. இன்று நமது வாழ்வின் திசையை நாம் லௌகீகத் துறையை நோக்கித் திருப்பிவிட்டதாலேயே பஞ்சம், வறுமை, தீய பழக்கவழக்கங்கள் வளர்ந்து வருகின்றன இந்த நிலை நிச்சயம் மாறவேண்டும். வாலிபர்கள் மத்தியில், சிறப்பாக கடவுள் நம்பிக்கை ஏற்படவேண்டும். சகல கருமங்களையும் இறைவனை முன்வைத்து நாம் செய்யப் பழக வேண்டும்"

இவ்வாறு மகாதேவ ஆச்சிரமத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ வடிவேல் சுவாமிகள் புலோலி கிழக்கு ஞான சம்பந்தர் கலைமன்ற மூன்றாவது ஆண்டு விழாவில் பேசுகையில் கூறினார்.

திவ்ய ஜீவன சங்கத்தாரின் கூட்டுப் பிரார்த்தனையுடன் ஆரம்பமான இவ்விழாவிற்கு திரு. மு. கணேசன் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையில் கிராமப்புறங்களில் இன்று கலை வளர்ச்சியில் ஆர்வம் ஏற்பட்டிருப்பதை இட்டுப் பெருமை அடைவதுடன் கலைவடிவாகவே இறைவனைக் கண்ட தமிழர் தம் கலைவளருவதால் நம் சமயப் பண்பும் நிச்சயம் வளர்ச்சியடையும் என்றார்.

வண. பிதா டேவிட், வண. இ. இ. குணரத்தினம் ஆகியோரும் ஞானசம்பந்தரது சேவை, கல்விஞானம் முதலானவை பற்றிப் பேசினர்.

பகல் நடைபெற்ற அன்னதானத்தைத் தொடர்ந்து மாலை நடைபெற்ற கலை நிகழ்ச்சிகட்கு பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் திரு. எஸ், கந்தசாமி தலைமை வகித்தார்.

ஞான சம்பந்தர் கலைமன்றம் கலைவளர்ச்சியில் ஈடுபடுவதுடன் கைத்தொழில் வளர்ச்சியிலும் பெண்பிள்ளைகளை ஈடுபாடுடையவர்களாகச் செய்யும் சேவை பாராட்டக்கூடியதெனக் கூறியதுடன் சமயத்தொண்டிலும் தொடர்ந்து சேவை செய்யவேண்டும் எனவும் தலைவர் தெரிவித்தார்.

சங்கீதம், நடனம், நாட்டியம், தாளவாத்தியக்கச்சேரியாகிலுவைகயுடன் "பொருளோ பொருள்" என்னும் சமூக நாடகமும் கலைமன்ற மாணவர்களால் நடாத்தப்பட்டது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

# சபையில் நடந்தது

-நமது நிருபர்-

## பழைய முட்டியில் பழைய கள்!

இலங்கையில் வாழும் தமிழர்கள் மாத்திரமல்ல தனியாட்சிக்கு அடிகோலுகிறார்கள். மலாயா தமிழர்களும், இந்தியத் தமிழர்களும் (தென் ஆபிரிக்காவை மறந்துவிட்டார் போலும்) ஒன்றாகக் கூடித் தனியாட்சி ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறார்களென்று திரு ஆர். ஜி, சேனநாயக்கா ஒரு புதிரை வெளியிட்டார். பழைய மொந்தையில் புதிய கள்ளானால் பரவாயில்லை. ஆனால் ஆர். ஜி.யினுடையது பழைய முட்டியுள்ளே பழைய கள் தான்.

இந்தியரை வெளியேற்றுவது, தமிழரை ஒதுக்குவது, பௌத்த சமயத்தையும், பௌத்த சிங்களவரையும் பாதுகாப்பது தான் ஆர். ஜி. பேச்சின் அடிப்படையாக இருந்தது. இப்படியே முஸ்லிம்களிலும் கைவைத்தார். திரு. தொண்டமானின் திட்டம் அலரிமாளிகையிலிருந்து மெனிக்காவை (முன்னாள் பிரதமர் திருமதி சிறிமாவைச் சுட்டிக்காட்டி) வெளியேற்றி இந்திய மீனாட்சியை அந்த அரியாசனத்தில் அமர்த்துவது தானென்றார் ஆர். ஜி.

சிங்களமய(க்க)த்தில் தாறுமாறாகப் பேசிய ஆர் ஜி.யை தமக்குப் புரிந்த பாஷையில் பேசுமாறு திரு. அமிர்தலிங்கம் கேட்டுக்கொண்டு வெட்டொன்று துண்டு இரண்டாகப் பதிலைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்தார். இவ்விதம் திரு. அமிர்தலிங்கம் சொல்லியதைத் தொடர்ந்து இருவருக்குமிடையில் சொற்போர் மூண்டு சபாநாயகர் தலையிட்டு அமைதியை நிலைநாட்டவேண்டியேற்பட்டது.

ரோடிகளைப போல் குறைகளை ஒழித்துக்கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் புரியாத பாஷையில் பேசி அலட்சியம் செய்வதைத் தம்மால் பொறுத்துக்கொண்டிருக்க முடியாதெனத் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

'கண்டியன்'களுக்குப் பதில் இப்போது 'இண்டியன்ஸ்' இதுதான் யு என் பி சகாப்தம் என்றார் ஆர். ஜி. ஆர். ஜி.யின் பேச்சு இன்றைய இந்திய எதிர்ப்பு பழைய இசைத் தட்டையே மீண்டும் கேட்பதுபோலிருந்தது.

•

அடுத்துப் பேசிய திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா( இவர், ஆர் ஜி அமர்ந்திருந்த வரிசையில் மறுகோடியில் அமர்ந்திருந்தவர்) சேர் ஐவர் ஜெனிங்ஸ், ஏர்க்கின்ஸ் போன்றவர்களின் ஆதாரங்களுடன் தேசிய அரசாங்கமென்றால் என்ன? எவ்விதம் அது அமைந்திருக்க வேண்டுமென விளக்கி, அரசாங்கத்தைக் கிண்டல்செய்தார். சிங்களத்தில் பேசிய திரு. பண்டாரநாயக்கா ஆங்கிலத்தில் குறிப்பிட்ட அரசியலறிஞரின் கருத்துக்களை வாசித்துக் காட்டியபோது அவரது கருத்தைப் புரிந்துகொண்ட ஜே. ஆர் ஜெயவர்த்தனா, அவர் வாசித்துக்காட்டிய புத்தகம் எப்பொழுது எழுதப்பட்டதெனக் கேட்டார். 1947ம் ஆண்டில்தான் எனப் பதில் கிடைத்தபோது சபையில் சிரிப்பொலி வெடித்தது.

அதற்குப்பின் 1947-ம் வருடத்துக்குப்பின்) பலமாற்றங்கள் இடம்பெற்று புதிய புத்தகங்கள் வெளிவந்துவிட்டன என ஜே ஆர் சுட்டிக்காட்டினார்.

பாண்டா-செல்வா ஒப்பந்தத்தை உருக்குலைத்தது யு என் பி தான் என்று கூறிய திரு பண்டாரநாயகா இலங்கையைத் துண்டாடப் போகிறார்களென பிரசாரம் செய்து அப்போது யு என் பி யினால் வெளியிடப்பட்ட இலங்கைப் படம் ஒன்றை தூக்கிப்பிடித்து சபையில் காட்டினார், பழைய பாடல்களும் அவசியம்தான்' என திரு பண்டாரநாயகா கூறியபோது அரசாங்கக்கட்சியிலிருந்து பதிலேதும் தெரிவிக்கப்படவில்லை,

•

சபாநாயகர் பீரிஸ் பல தடவைகளில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக எம் பிக்களைக் கண்டித்தார், சபாநாயகர் கண்ணில் பட்டவர்களில் கல்வி மந்திரி திரு இரியகொலையும் ஒருவர் எதிர்க்கட்சியினர் திரு இரியகொலையை சீண்டிக் கொண்டிருந்தனர்,

•

பாராளுமன்றத்துக்கு வரும் நமது பிரதிநிதிகள் வாக்களிப்பு நேரத்தின்போது கூட உரிய நேரத்துக்கு சரியாக வருவதில்லை, அநேகர் நேற்று தலையையே காட்டவில்லை இந்த நிலையில் சிலர் கடைசி நேரத்தில் வந்து வாக்குச் சீட்டுகேட்டபோது சபாநாயகர் இப்படியான நேரத்திலாவது நேரத்துக்கு வரக் கூடாதா? என சற்று அவர்களது பொறுப்பை உணர்த்தி விட்டார், நேற்று நடைபெற்ற செனட்டர் தெரிவின்போது தான் மேற்படி காலதாமதங்கள் ஏற்பட்டன.

•

வாக்களிப்பதில் மக்கள் பிரதிநிதிகள் கூட இன்னும் தேர்வு பெற்றுவிடவில்லைப் போலத் தான் தோன்றுகிறது. நேற்று நடைபெற்ற செனட்டர் தெரிவின்போது அளிக்கப்பட்ட வாக்குகளில் இருவாக்குகள் பழுதடைந்ததாக காணப்பட்டன,

மக்களின் பிரதிநிதிகளுக்கே சரியாக வாக்களிக்கத் தெரியாது விட்டால்?: விஷயம் வெளியே தெரிந்ததும் நேற்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் இருசாராரும் பலத்த கோஷம் செய்தனர்,

# புதிய செனட்டர் அப்புஹாமி

கொழும்பு, செவ்

செனட்டில் காலியான ஸ்தானத்துக்கு அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த எம் என் அப்புஹாமி 52 அதிகப்படியான வாக்குகளால் இன்று தெரிவு [illegible] சார்பில் [illegible] மற்று போட்டியிட்டார்,

# மலேஷியா : • :

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விலகப்படுகிறது.

ஜப்பானிய பிரதிநிதி தெரிவித்த அடிப்படை யோசனைக்கு மலேஷியா இணங்கியிருப்பதாயும் துங்கு அப்துல ரஹ்மான கூறினார்.

சிங்கப்பூரில் நேற்று இந்திய உணவு மந்திரி திரு. சுப்ரமண்யம் பேசுகையில், வருகிற ஜூலை மாதம் அல்ஜியர்ஸில் நடைபெறவிருக்கும் ஆசிய ஆபிரிக்க மகாநாட்டில் மலேஷியா பங்குபற்றும் சாத்தியம் அதிகரித்திருப்பதாய்க் கூறினார். மலேஷியா பங்குபற்றுவதை இந்தோனேஷியா எதிர்க்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அதே சமயம் சீன எதிர்ப்புக்கு மத்தியிலும் ரஷ்யா இம் மகாநாட்டில் பங்குபற்றும் சாத்தியம் இருப்பதாக திரு சுப்ரமண்யம். கூறினார்.

# சூவும் பட்டாசும்

ஜாகார்த்தா, ஏப். 20

பாண்டுங் மகாநாட்டில் 10-வது ஆண்டு கொண்டாட்டத்துக்காக வந்த சீனப் பிரதமர் சூ 20 டன் சீன வெடிகள் கொண்டுவந்திருக்கிறார்; கொண்டாட்டத்தில் இந்த வெடிகள் வெடிக்கப்படும், சீன ராணுவ அதிகாரி ஒருவரின் மேற்பார்வையில் இவை வெடிக்கப்படும்.

சன்மானம்

மன்னாரிலிருந்து நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்த இ. போ. ச. பஸ்ஸில் (இலக்கம் IC 3107) இரு பெரிய என்வலப்புகள் கொண்ட ஒரு பேப்பர் பாக் என்னால் தவறவிடப்பட்டுள்ளது. இதற்குள் எனக்கு மிக அவசியம் தேவைப்படும் தஸ்தாவேஜுகள் இருப்பதால் கண்டெடுப்போர் தயவுசெய்து என்னிடம் சேர்ப்பிக்கவும். தகுந்த சன்மானம் தரப்படும், விலாசம்: பொ. நடராஜா, சிவானந்தா கபே, மாங்குளம் அல்லது ஈழநாடு காரியாலயத்தில் சேர்ப்பிக்கவும். 75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org